**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-08042024-7825

Volume: 8

Issue: 4

Month: April

Year: 2024

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 20.01.2024

Accepted: 25.03.2024

Published: 01.04.2024

Citation:
Madhavan, P. (2024). Pathinenkeezhkanakku Books Reference Musical Instruments. *Shanlax International Journal of Tamil Research*, 8(4), 74–78.

DOI:
https://doi.org/10.34293/tamil.v8i4.7825

*Corresponding Author:
veenamathavan85@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Musical Instruments Referred to in The Pathinenkilkanakku Texts

**Praveena Madhavan**
*Lecturer, Music Department*
*Swami Vipulananda Institute of Aesthetic Studies*
*Eastern University of Sri Lanka*
*https://orcid.org/0009-0000-8370-1985*

**Abstract**
*References to musical instruments are available in very small quantities in the Pathinen Keezhkanakku texts. There are references to both banyan and percussion music. I don't know much about the instruments, but we can get a brief picture of them. Here we will examine the instruments mentioned in the poems of the Pathinen Keezhkanakku.*

***Keywords: Instrumental, Musical, Percussion, Yazh***

**References**

1. Sundaresan, P, Sangam Age Music, Second World Tamil Conference Festival Issue, Chennai, 1968.
2. A. N. Perumal, Tamilarisai

# பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் சுட்டும் இசைக்கருவிகள்

*முனைவர் பிரவீனா மாதவன்*
விரிவுரையாளர், இசைத்துறை
சுவாமி விபுலாநந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

***ஆய்வுச் சுருக்கம்***
*இந்தவகையில் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் யாழ், குழல், பறை, முரசு, முழா, துடி போன்ற கருவிகள் இடம்பெற்றுள்ளன. சங்க காலத்திலுள்ள முக்கியமான பண்ணிசைக்கருவியான யாழைப் பற்றிய சில செய்திகளை இந்த நூல்களும் தருகின்றன. குழலைப் பற்றிய குறிப்புக்களே பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் அதிகமாகக் கிடைக்கின்றன. இதிலுள்ள அகப்பொருள் நூற்களில் மரபு முறைக்கு இணங்க கோவலர்களின் குழல் பற்றிய செய்திகள் உள்ளன. தாள இசைக்கருவிகளில் பறை மிக அதிகமாகப் பேசப்படுகின்றது. பறை என்பது மக்களுக்குச் சேதிகளை அறிவிக்கும் கருவியாக பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் முரசு ஓரு போரிசைக்கருவியாகச் சங்ககாலத்தில் மிகச் சிறப்புடன் கருதப்பட்டு பெரும் மதிப்புடன் பாராட்டப்பெற்றது. அதைப்பற்றிச் சில செய்திகள் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களிலும் உள்ளன. முழாவும் அக்காலத்தில் பழக்கத்திலிருந்த முக்கியமான ஒரு கருவியாக இருந்திருக்க வேண்டும். அதைச்சுருதி சேர்த்து இசைப்பது வழக்கம். மற்றும் துடி எனும் கருவியின் வலக்கண்ணே இசை எழுப்பப் பயன்படும் என்பதனை நாலடியாரிலுள்ள பாடல் ஒன்றினால் நன்கு அறியக் கூடியதாக உள்ளது.*
***முக்கியச் சொற்கள்:*** *கருவி, பண்ணிசை, தாளஇசை, யாழ்*

### முன்னுரை

இசைக்கருவிகள் பற்றிய குறிப்புக்கள் குறைந்த அளவில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் கிடைக்கின்றன. பண்ணிசை, தாள இசை ஆகிய இருவகைகளைப் பற்றியும் செய்திகள் உள்ளன. கருவிகளைப் பற்றி சிறப்பாக அறியமுடியாவிட்டாலும் சுருக்கமாகத் தெரிந்துகொள்ள முடிகின்றது. பதினெண் கீழ்க்கணக்கு பாடல்கள் குறித்துள்ள கருவிகள் எவை என ஆராயப்படவுள்ளன.

### யாழ்

சங்க காலத்திலுள்ள முக்கியமான பண்ணிசைக் கருவியான யாழைப் பற்றிய செய்திகளைப் பதினெண்கீழ்க் கணக்கு நூல்களும் தருகின்றன. இசைக் கருவிகளில் சிறப்பாகக் கருதப்படும் குழலையும் யாழையும் திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார் .

**“குழலினிது யாழினிது என்ப” - குறள்:66**

குழந்தைகளின் மழலைச் சொல் கேட்டு இன்புறுவது இதன் உணர்வாகும். ஆனால் இசை நிலையில் குழலும் யாழும் இனியவை என்பது குறிப்பாகின்றது. அக்கால இசைக் கருவிகளில் குழலும் யாழும் இனிமையானவை என்பதால் திருவள்ளுவர் இவ்விரு இசைக் கருவிகளையும் தேர்ந்தெடுத்து இக்குறளை இயற்றியுள்ளார். இதிலிருந்து அக்காலத்தில் குழலுக்கும் யாழுக்கும் நல்ல வரவேற்பு இருந்ததென்பது தெளிவாகின்றது.

அறிய வேண்டியவை ஐந்து. அவற்றில் ஒன்று யாழ். இதனை உணர்த்த “யாழினொடு எண்ணுங்கால்” (சிறுபஞ்: 92.1-2) என்று கூறப்பட்டுள்ளது. சிட்டன் என்பான் கணிதம், யாழ், சாந்தம், எழுதல், இலைநறுக்கு, ஆகிய ஐந்தும் அறிந்தவனாக

இருக்க வேண்டும் என்பது அக்காலக் கருத்து. இதிலிருந்து யாழிசை அறிவுக்கு எவ்வளவு உயர்வு கொடுக்கப்பட்டிருந்தது என்பதை அறியலாம்.

பல வகையாக யாழைப் பற்றித் திணைமாலை நூற்றைம்பது என்ற அகப் பொருள் நூல் குறிப்பிடுவது அக்கருவியின் பெருவழக்கைக் காட்டுவதாக அமைகின்றது.

**"செவ்வழி யாழ்" - 124:1**

**"மாக்கோல் யாழ்" - 125:1**

**"விளரி யாழ்" - 126:1**

**"மடங்கிறவு போலும் யாழ்" - 131:1**

**"பாலை யாழ்"- 133:1**

செவ்வழி, விளரி, பாலை என்ற அடைகளுடன் யாழ் சங்க இலக்கியத்திலும் குறிப்பிடப் பெற்றுள்ளதை இங்கு இணைத்துச் சிந்திக்கலாம்.

காலையிலும் மாலையிலும் யாழிசைப்பது வழக்கம். ஆனால் இரு நேர இசையிலும் மாற்றம் இருப்பதை அறிய வேண்டியுள்ளது. தலைவி பாணனிடம் கூறும் உரையாகத் திணைமாலை நூற்றைம்பது இதனை உணர்த்துகின்றது.

**"பாலையாழ்ப் பாண்மகனே பண்டுநின் நாயகற்கு**
**மாலை யாழோதி வருடாயோ - காலையாழ்**
**செய்யும் இடமறியாய்.."- 133:1-3**

பாணன் தலைவனுக்கு மாலையில் பரதத்தை இல்லத்தில் யாழிசைத்து இன்புணர்வுக்குத் துணை நின்றுள்ளான். காலையில் தலைவியிடம் வந்து யாழிசைத்து ஊடல் தவிர்க்க வழிவகை முயல்கின்றான். இப்படியான இசை யாழில் இசைக்கப்படுவதை இப்பாடல் காட்டுகின்றது.

### குழல்

இனிமையான இசையை உடையது குழல். அதனை சிறப்பித்துக் கூறும் நிலையில் "தீங்குழல்" என்று திணைமாலை நூற்றைம்பது குறிப்பிட்டுள்ளது. சங்க காலத்தைப் போன்று குழலூதி ஆயர்கள் ஆநிரை காத்துள்ளனர்.

**"கொன்றைக் குழலூதிக் கோவலர் பின் நிரைத்து"**

நின்ற செய்தியை ஐந்திணை எழுபது எடுத்துக் கூறுகின்றது,

யாழும், குழலும், முழவும் இயைந்து இசை உண்டாக்கி மக்களை மகிழ்விக்கும் இயல்பு உடையன. இவை இன்னியமாக ஒலிக்கும். இதனைத் திணைமொழி ஐம்பது சுட்டுவதைக் காணலாம்.

**"யாழும் குழலும் முழவும் இயைந்தென**
**வீழு மருவி விறள் மலை நல்நாட''**

**- 7:1-2**

அருவி மலையிலிருந்து விழும்போது யாழ், குழல், முழவு ஆகிய இன்னியங்கள் இணைந்து இசைப்பன போன்று உள்ளது.

**"கொன்றைக் கொடுங்குழல் ஊதிய கோவலர்**
**மன்றம் புகு தரும் போழ்து"**

**- கைந்நிலை 30:3-4**

தலைவன் தலைவியைப் பிரிந்துள்ளான். மாலை நேரம் வருகின்றது. அவளுடைய பிரிவுத் துயர் அதிகமாகியது. அப்பொழுது கோவலர் கொன்றைத் தீங்குழலை ஊதுவது அவள் காதில் விழுகின்றது. இதனால் அவளது பிரிவுத் துயர் தணிக்கின்றது என்றவாறு பாடல் அமைகின்றது.

குழலைப் பற்றிய குறிப்புக்களே பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் அதிகமாகக் கிடைக்கின்றன. இதிலுள்ள அகப்பொருள் நூற்களில் மரபு முறைக்கு இணங்கக் கோவலர்களின் குரல் பற்றிய செய்திகள் உள்ளன. சிறப்பாகக் குரலிசை குழலமைப்புப் பற்றி அறிவதற்கு எதுவுமில்லை. அதன் ஓசை இனிமையைப் பற்றி அறிய ஒரு குறிப்பு நா நாற்பதில் உள்ளது.

**"குழலி னினியமரத் தோசை நற்கின்னா"**

**- 35:2**

என்ற அடியில் மரத்தினூடே காற்றுப்புகுந்து சில சமயம் இனிமையாக ஒலிப்பது குழலொலியைக் காட்டிலும் இனியதன்று. அது இன்னாவாகும். எவ்வாறாயினும் புல்லாங்குழலின் இசை இனிமையானது என்பது குறிப்பாகும்.

**பறை**

தாள இசைக்கருவிகளில் பறை அதிகமாகப் பேசப்படுகின்றது. பறை என்பது மக்களுக்குச் சேதிகளை அறிவிக்கும் கருவியாக பயன்படுத்தப்பட்டுள்ளது. இதை அடிப்படையாகக் கொண்டு

**"அறைபறை யன்னர் சொல்லின்னா"**

**- இன்னாநாற்:23.3**

என்று இன்னா நாற்பதில் கூறப்பட்டுள்ளது. அடக்கமின்றி செய்தி அறிவிக்கும் பறை போன்று எல்லோரிடமும் பேசிக்கொண்டு திரிவோரின் சொல் தீமையானது என்பது இவ்வடியின் குறிப்பு.

பறை அறைவார் போகும் இடம் சிறப்புடையது அன்று என்பதை விளக்கும் முறையில் ஒரு பழமொழி உள்ளது. அதனைப் பழமொழி நானூறு

**"புண்ட பறையறையார் போயினார் இல்" - 85:4**

என்று குறிப்பிடுகின்றது, இது இக்காலப் பழமொழியான அமினா சென்ற வீடும் ஆமை புந்த இடமும் வாழாது என்பதுடன் ஒப்பிட்டுக் காணலாம்.

திருக்குறள் மூன்று இடங்களில் இப்பறையைக் குறிப்பிட்டுள்ளது. "அறைபறை யன்னர் கயவர் " (குறள்:1076) என்று பொருட்பாலில் குறிப்பிடும் வள்ளுவர் காமத்துப் பாலில் இரு குறள்களில் இப்பறையைப் பயன்படுத்தி அதற்குப் பெருமை தோன்றக் கூறிருப்பதைக் காணமுடிகின்றது.

**"அனிச்சப்புக் கால்களையாள் பெய்தாள்நுசப்பிற்கு**
**நல்ல படாஅ பறை - குறள்:1115**

என்றும்

**"மறைபெறல் ஊரார்க்கு அரிதன்றால் எம்போல்**
**அறைபறை கண்ணா ரகத்து"**

**- குறள்:1180**

**முரசு**

முரசு ஒரு போரிசைக் கருவியாகச் சங்ககாலத்தில் சிறப்புடன் கருதப் பெற்று பெரும் மதிப்புடன் பாரட்டப் பெற்றது. அதைப்பற்றிச் சில செய்திகள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களிலும் உள்ளன. மலையில் இருந்து விழும் அருவி ஒலிப்பது முரசு ஆர்ப்பது போன்று இருப்பதாகக் கைந்நிலை குறிப்பிடுகின்றது.

**"முரசருவி ஆர்க்கும் மலை நாடர் க்கு"**

**- 5:3**

உருவகமாக அருவியின் ஆர்ப் பொலியை முரசியம்பலாகக் காட்டுகின்றது. போர் முரசு சிறப்பிக்கப்படுவதைக் களவழி நாற்பதில் பாடல்கள் வாயிலாக அறியலாம். ஒலி முரசம், மாமுரசு, இடிமுரசு என்று இந்நூல் சிறப்பிக்கிறது. போர்க்களத்தில் பகையரசரின் முரசு குருதியில் குளித்துக் கிடப்பதை வெற்றியடைந்த மன்னனின் புகழ்க் குறிப்பாக நூல் குறிப்பிடுகின்றது. களவழி நாற்பது போர் பற்றிய நூல் ஆனதனால் அது போர்க்களத்தில் முழக்கப்படும் முரசைப் பற்றிப் பேசுகின்றது.

கார் நாற்பது அகப்பொருள் நூல்

**"வென்றி முரசின் இரங்கி எழில் வானம்**
**நின்றிரங்கும் இவட்கு"**

**(கார் நாற்பது.35:3-4)**

என்று குறிப்பாகவும் சிறப்பாகவும் குறிப்பிடுகின்றது. வெற்றியின்போது முரசு எழுச்சிக்குரலில் முழக்கப்படும். தலைவியின் இரக்க உணர்வை இணைத்துக்காட்டுவதாக 'இரங்கியது' என்று குறிக்கப்படுகின்றது. இங்கு மனித உணர்வைப் புலப்படுத்த முரசொலி பயன்படுத்தப்பெற்றுள்ளது.

**முழா**

முழாவும் அக்காலத்தில் பழக்கத்திலிருந்த முக்கியமான ஒரு கருவியாக இருந்திருக்க வேண்டும். அதைச்சுருதி சேர்த்து இசைப்பது வழக்கம். இவ்வழக்கத்தை ஓர் உவமையாகக் களவழி நாற்பது பயன்படுத்தியுள்ளது.

**"அதிர் விலாச் சீர் முழாப் பண்ணமைப்பான் போன்ற"- 20:2-3**

உவமையில் முழாவின் சீர்மை குறிப்பிடப்படுகின்றது. அதில் அதிர்விருப்பது குறையாக இருக்கின்றது. ஆகையால் புலவர் 'அதிர் விலாச் சீர் முழா:' என்று சிறப்பித்துக் கூறுகின்றார் .

**துடி**

துடியின் வலக்கண்ணே இசை எழுப்பப் பயன்படும் என்பதனை நாலடியாரிலுள்ள பாடலினால் அறியலாம். இப்பாடல் தலைவி ஒருத்தி அவளிடம் தலைவனுக்காகத் தூதுவந்த பாணனிடம் கூறியதாகும்.

**"கொடியவை கூடாதி பாண! நீகூறின்**
**அடிபைய விட்டொதுங்கிச் சென்று - துடியின்**
**இடக்கண் அனையம்யாம் ஊரற் கதனால்**
**வலக்கண் அனையார் க்கு உரை"**

**- நாலடியார் :388**

பாணன் இசைப் பாட்டுக்களைப் பாடிப்பிழைப்பவன். தலைவன் பரத்தையுடன் கூடியிருக்கும்போது தலைவி ஊடுவாள் அதனைத் தீர்க்கத் தலைவனுக்காக அவளிடம் தூது செல்வது பாணனது வழக்கம். அவ்வாறு ஒரு பாணன் தலைவியிடம் செல்லும்போது தலைவி துடியை உவமையாக்கிப் பாணனிடம் தன்னுடைய அவலநிலையை விளக்குகிறாள்.

துடிக்கு இரு கண்கள் உண்டு. அவற்றுள் அடித்து இசை காண்பதற்குரியது வலக்கண். இடக்கண் அடிபடாது பயனின்றியே இருக்கும். அதேபோன்று தலைவனது உறவால் அவனுக்கு இன்பம் கொடுக்கும் பரத்தை துடியின் வலக்கண்ணாகவும் தலைவனால் தழுவப்படாது தவிக்கும் தலைவி துடியின் பயன்படாத இடக்கண் போலவும் அமைவதைத் தலைவி குறிப்பதாகப் புலவர் குறிப்பிட்டுள்ளார் .

இக்காலத்தில் உடுக்கு என்ற கருவியைக் கையினால் அடித்து தாள இசையை சுவையாகக்கூட்டுவதைக்காணலாம். அதன் வலது கண்ணை விரலால் அடிப்பர் . இடது கண்ணைத் தொடுவதே இல்லை. துடியைப் பற்றி நாலடியார் குறிப்பிடுவதைப் போல இக்கால உடுக்கு காணப்படுகின்றது. துடியின் நடுப்பகுதி ஒடுங்கி இருக்கும். அதனால் அதைப் பெண்களின் இடைக்கும் யானையின் அடிக்கும் உவமை கூறுவது வழக்கம். உடுக்கும் அவ்வாறே இருக்கும். இன்றைய உடுக்கு அன்றைய துடி என்பது உறுதியாகின்றது.

**முடிவுரை**

சங்ககால இலக்கிய வகையில் இசைக் கருவிகள் பற்றி பல்வேறு நூல்கள் பல்வேறு விதமாக விதந்துரைத்துள்ளன. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் புலவர்களால் தக்கவகையில் இசைக்கருவிகளான யாழ், குழல், பறை, முரசு, முழா, துடி என்பவை குறிப்பிடப்பட்டுள்ளன.

**உசாத்துணை நூல்கள்**

1. சுந்தரேசன். ப, சங்ககால இசை, இரண்டாம் உலகத்தமிழ் மாநாடு விழா மலர், சென்னை, 1968
2. பெருமாள், ஏ.என்., தமிழரிசை